நகல்:-

**சுருக்கம்**

பழங்குடியினர் நலம் – கல்வி – உண்டி உறைவிட ஆரம்ப/நடுநிலை/உயர்நிலைப் பள்ளிகள் – 2011–12 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் பழங்குடியின உண்டி உறைவிட ஆரம்ப/நடுநிலை/உயர்நிலைப் பள்ளிகளின் பழுதுபார்ப்பு பணிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி ஒப்பளிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

(ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல (ஆதிந 2) துறை)

அரசாணை (நிலை) எண். 88 நாள்: 24.10.2011
ஐப்பசி 7, திருவள்ளுவர் ஆண்டு 2042.

படிக்கப்பட்டது

இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களின் கடித ந.க.பமே / ஆ1 / எண். 2580 / 2011, நாள்.19.7.11 மற்றும் 19.9.11.

-----

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள், திருவண்ணாமலை, தருமபுரி, நீலகிரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் இயங்கிவரும் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 27 பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்ப/நடுநிலை/உயர்நிலைப் பள்ளிகளில் சிறப்பு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 2011 –12 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.49,00,000/– (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சம் மட்டும்) அனுமதிக்ககோரி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2) மேலே பத்தி 1–ல் உள்ள பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று 2011–12 –ம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை, தருமபுரி, நீலகிரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் இயங்கிவரும் இணைப்பில் கண்டுள்ள 27 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் ஆரம்ப/நடுநிலை/உயர்நிலைப் பள்ளிகளில் பழுது பார்ப்பு பணிகள் மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள ரூ.49,00,000/– (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது

3) நடைமுறையில் உள்ள விதிமுறைகளைப் பின்பற்றி திருவண்ணாமலை, தருமபுரி, நீலகிரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் இயங்கிவரும் 27 பழங்குடியினர் நல உண்டி உறைவிட ஆரம்ப/நடுநிலை/உயர்நிலைப் பள்ளிகளின் பழுதுபார்ப்பு /பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு, மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று மேற்காணும் நான்கு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

4) மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02 – பழங்குடியினர் நலன் – 277 – கல்வி– பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JC – மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளைத் தொடங்குதலும் பராமரித்தலும் – 17 சிறுபணிகள் (த.தொ.கு. 2225–02–277– JC - 1700)

(த.பி.பா)....

5) மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை மேற்பார்வையிட்டு, அத்தொகையினை பயன்படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றினை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6) மேலும் பகுதி II திட்டங்களுக்கு என ஒப்பளித்த தொகையினை மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும் எனவும், இத்திட்டத்தின் செலவினம் போக மீதத்தொகை இருப்பின் அத்தொகையை அரசு கணக்கில் உடனடியாக ஒப்படைப்பு செய்தல் வேண்டும் எனவும் பழங்குடியினர் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

7) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண். 50326/ஆதி(ம)பந/11, நாள்.27.9.2011 –ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை –5
ஆணையர், ஆதிதிராவிடர் நலன், சென்னை –5
மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை, தருமபுரி, நீலகிரி மற்றும் சேலம் மாவட்டங்கள்
மாவட்ட ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல அலுவலர், திருவண்ணாமலை, தருமபுரி, நீலகிரி மற்றும் சேலம் மாவட்டங்கள்
மாவட்ட கருவூல அலுவலர்கள், திருவண்ணாமலை, தருமபுரி, நீலகிரி மற்றும் சேலம் மாவட்டங்கள்
மாநில முதன்மை கணக்காய்வு தலைவர், சென்னை –18
மாநில கணக்காய்வுத்தலைவர் – 35/6
சம்பள கணக்கு அலுவலர் – 5/35

நகல்
நிதி (ஆதி (ம) பந / வ.செ.பொ.II) துறை, சென்னை –9
அமைச்சர் (ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை –9
ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (அநமு1, ஆதிந 4, ஆதிந 7, ஆதிந 8) துறை, சென்னை –9
உதிரி / இருப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

6.2.2014.
பிரிவு அலுவலர்.

இணைப்பு

அரசாணை (நிலை) எண். 88. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(ஆதிந2) த்துறை, நாள்.24.10.2011
2011–12 ஆம் ஆண்டில் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் பழங்குடியினர் நல உண்டி உறைவிடப்பள்ளிகள் பற்றிய விவரங்கள்.

| | மாவட்டம் | வ. எண். | பள்ளியின் பெயர் | பராமரிப்பு பணி விவரம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| I | திருவண்ணாமலை | 1. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, சு.கீழ்நாச்சிப்பட்டு | தரை பழுதுபார்த்தல், ரூப்தட்டை ஓடு பதித்தல், சிமெண்ட் கூறை பழுதுபார்த்தல் | 2.00 |
| | | 2. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, பீமாரப்பட்டி | ,, | 1.50 |
| | | 3. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, ஒரூர்கவுண்டனூர் | ,, | 2.00 |
| | | 4. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, கீழ்தட்டாம்பட்டி | ,, | 2.00 |
| | | 5. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, கீழ்பட்டு | ,, | 2.00 |
| | | 6. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, பட்டரைக்காடு | ,, | 1.50 |
| | | 7. | பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி, தாத்தம்குப்பம் | ,, | 2.00 |
| | | 8. | பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி, ஆட்டியனூர் | ,, | 2.00 |
| | | 9. | பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி, பலாமருதூர் | ,, | 2.00 |
| | | 10 | பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி, அரசுவல்லி | ,, | 1.50 |
| | | 11. | பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளி, நம்பியம்பட்டு | ,, | 1.50 |
| | | | மொத்தம் | | 20.00 |
| II. | தருமபுரி | 1. | பழங்குடியினர் உண்டி உறைவிடப் –பள்ளி, பட்டுக்கோணம்பட்டி | பழுதுபார்த்தல், மின்வசதி, கதவு, ஜன்னல்கள் பழுது பார்த்தல் மற்றும் வண்ணம் பூசுதல் | 2.00 |
| | | 2. | பழங்குடியினர் உண்டி உறைவிடப் –பள்ளி, எலந்தக்கோட்டப்பட்டி | கதவு, ஜன்னல்கள் பழுதுபார்த்தல், வண்ணம் பூசுதல், வெள்ளையடித்தல் | 2.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 3. | பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளி, கல்லாத்தப்பட்டி | வெள்ளையடித்தல், பழுதுபார்த்தல், கதவு, ஜன்னல்கள் பழுதுபார்த்தல். | 0.50 |
| | | 4. | பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளி, கல்நாடு | வெள்ளையடித்தல், பழுதுபார்த்தல், கதவு, ஜன்னல்கள் பழுதுபார்த்தல். | 0.50 |
| | | 5. | பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளி, மாங்கடை | வெள்ளையடித்தல், பழுதுபார்த்தல், கதவு, ஜன்னல்கள் பழுதுபார்த்தல். | 0.80 |
| | | 6. | பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளி, நொச்சிக்குட்டை | வெள்ளையடித்தல், பழுதுபார்த்தல், கதவு, ஜன்னல்கள் பழுதுபார்த்தல். | 0.80 |
| | | 7. | பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளி, நாட்டன்வளவு | கழிவறைகள், பைப்லைன்கள் அமைத்தல் மற்றும் பராமரிப்பு | 0.40 |
| | | | மொத்தம் | | 7.00 |
| III. | நீலகிரி | 1. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, மாவனல்லா | கழிவறை, சிறுநீர் கழிவறை, குழாய் இணைப்பு செய்தல் பணி மற்றும் பராமரிப்பு | 2.00 |
| | | 2. | பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி, கரிக்கியூர் | கழிவறை, சிறுநீர் கழிவறை, குழாய் இணைப்பு செய்தல் செராமிக் டைல்ஸ் புளோரிங் அமைத்தல் மற்றும் பராமரிப்பு | 2.50 |
| | | 3. | பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளி, அல்லிமாயார் | கழிவறை, சிறுநீர் கழிவறை கட்டுதல் மற்றும் பராமரிப்பு | 1.50 |
| | | 4. | பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளி, தொரப்பள்ளி | கழிவறை, சிறுநீர் கழிவறை, தண்ணீர் வசதி பணி, தரை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி. | 3.00 |
| | | | மொத்தம் | | 9.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| IV. | சேலம் | 1. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, ராமன்பட்டி | பழுதுபார்த்தல் மற்றும் மின்வசதி செய்தல் | 3.00 |
| | | 2. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, பகுடுபட்டு | பழுதுபார்த்தல் மற்றும் மின்வசதி செய்தல் | 4.00 |
| | | 3. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, குன்னூர் | பழுதுபார்த்தல் மற்றும் மின்வசதி செய்தல் | 2.50 |
| | | 4. | பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப்பள்ளி, புதூர் | பழுதுபார்த்தல் மற்றும் மின்வசதி செய்தல் | 2.00 |
| | | 5. | பழங்குடியினர் உண்டி உறைவிட துவக்கப்பள்ளி, சூலாங்குறிச்சி | பழுதுபார்த்தல் மற்றும் மின்வசதி செய்தல் | 1.50 |
| | | | மொத்தம் | | 13.00 |

## சுருக்கம்

| வ. எண். | மாவட்டம் | பள்ளி / விடுதிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | திருவண்ணாமலை | 11 | 20.00 |
| 2. | தருமபுரி | 7 | 7.00 |
| 3. | நீலகிரி | 4 | 9.00 |
| 4. | சேலம் | 5 | 13.00 |
| | மொத்தம் | 27 | 49.00 |

(ரூ.49,00,000/- (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சம் மட்டும்)

//உண்மை நகல்//

சே. சம்பத்குமார் 6.2.2014

பிரிவு அலுவலர்